# இயேசு யார்?

நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்.
2 கொரிந்தியர் 4:5

பீட்டர் வாக்கர்

www.1peter1three.weebly.com

Translated and designed by
Good Shepherd Media, Secunderabad 500 067
E-mail: printing@ombooks.org

# பொருளடக்கம்


அறிமுகம் . . . . . . . . . . 5

இயேசு யார்? . . . . . . . . . . 7

கிறிஸ்துவின் செய்தி . . . . . . . . . . 9

நம்பிக்கை . . . . . . . . . . 11

பொக்கிஷம் . . . . . . . . . . 14

இரத்தம் . . . . . . . . . . 16

ஆவி . . . . . . . . . . 18

அழைப்பு . . . . . . . . . . 20

புதிய வாழ்வு . . . . . . . . . . 23

மேற்கோள் காட்டப்பட்ட வேத வசனங்கள் . . . . . . . . . . 26

வாசகராகிய உங்களுக்கு இந்த சிறு புத்தகத்தை சமர்ப்பணம் செய்கிறேன். இயேசு கிறிஸ்துவைப் பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்ள அனுமதித்ததற்காக உங்களுக்கு நன்றி.

வேத புத்தகத்தைப் பற்றிய முறைப்படியான படிப்பு எனக்கு இல்லை. பலவிதமான இறையியல் பிரிவுகளில் நான் எதைச் சார்ந்தவன் என்றும் எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை. ஆனாலும் நான் இயேசுவைப் பின்பற்றுபவன். வேதாகமத்தைப் பின்பற்றுகிறேன். சில சிந்தனைகளை உங்களுடன் நான் பகிர்ந்து கொள்ள அனுமதியுங்கள்

# அறிமுகம்

“இயேசு யார்?” என்ற கேள்வியை நீங்கள் கேட்பவராக இருந்தால் நீங்கள் உண்மையிலேயே ஒரு அருமையான இடத்தில் இருக்கிறீர்கள்!

நீங்கள் கடவுள் மேல் கோபத்தில் இருக்கலாம். அப்படி ஒருவர் இல்லை என்று இப்போது நினைத்துக் கொண்டிருக்கலாம். அல்லது கடவுளை நம்புகிற நீங்கள் காயப்பட்டுப் போய் இருக்கலாம். அல்லது நீங்கள் ஒரு முஸ்லிமாகவோ, இந்துவாகவோ, புத்த மதத்தினராகவோ, வேறு எந்த நம்பிக்கை உடையவராகவோ இருக்கலாம். அல்லது நீங்கள் எந்த நம்பிக்கை உடையவர் என்றே சொல்ல முடியாத ஒரு இடத்தில் நீங்கள் இருக்கலாம். உங்கள் உணர்வு எதுவாக இருந்தாலும் நீங்கள் எந்த இடத்தில் இருந்தாலும், என் நண்பரே, வேதாகமத்தின் கடவுள், அந்தப் புத்தகத்தின் துவக்கத்தில் இருந்து முடிவு வரை, “இயேசு யார்?” என்று கேட்க வேண்டும் என்று கேட்கிறார், வரவேற்கிறார்.

உங்களுக்குப் பலப்பலக் கேள்விகள் இருக்கலாம். அவற்றைப் பற்றி என்னால் பதில் சொல்லவும் முடியாது. அவற்றைப் பற்றி நான் பேசவும் போவதில்லை. உண்மையிலேயே இந்த சிறிய புத்தகத்தில், இயேசுவை நம்பும் ஒருவராகவே உரையாடுகிறேன். உங்களுடன் சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறேன். என் கருத்துக்களின் துவக்கமானது என் நம்பிக்கை, வேத புத்தகம், கடவுளின் ஆவியானவர் தான்.

66 புத்தகங்கள் அல்லது எழுத்துப்படைப்புகளின் தொகுப்பான வேதாகமம் கடவுளின் உந்துதலால் எழுதப்பட்ட கடவுளின் வார்த்தை என்று நான் நம்புகிறேன். எந்த ஒரு நல்ல, உண்மையான பொருளையும் போல வேதாகமமும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட, தவறாகப் பயன்படுத்தப்பட,

சந்தேகத்துக்கு உட்படக் கூடும். ஆனாலும், வேதாகமத்தைப் பயன்படுத்தும் மனிதர்களின் குறைகளையும் தாண்டி, அது நேர்மையாக உண்மையைத் தேடுபவர்களுக்கான கடவுளின் நம்பத் தகுந்த ஆதாரமாக இருக்கின்றது. எளிதாக வாசிப்பதற்கு வசதியாக இது படிப்பறிவில்லாத மனிதர்களால் எழுதப்பட்டிருக்கிறது. கடவுள் நம்மிடம் இருந்து வேதாகமத்துக்குள் ஒளிந்து கொள்ளவில்லை. அவர் தம்மை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

இப்போது “இயேசு யார்?” என்னும் இந்த மிக முக்கியமான கேள்வியைப் பற்றிய எனது கருத்துக்களை நான் உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

# இயேசு யார்?

இயேசு என்பதற்கு "கடவுள் காப்பாற்றுகிறார்" என்று பொருள் என்று வேதாகமம் கூறுகிறது. அவர் மனிதர் உருவத்தில் வந்த கடவுள் என்கிறது. நாம் கடவுளிடம் தனிப்பட்ட முறையில், முழுமையாக உறவு கொள்ள வேண்டும் என்பதற்காக, கடவுள் வானலோகத்தில் இருந்து இறங்கி ஒரு மனிதனாக இந்த உலகத்துக்கு வந்தார்.

மனித மாமிசத்தில் வந்த கடவுள் தான் இயேசு. அவர் நம் பாவங்களை மன்னிப்பதற்காகவும் நமக்கு முடிவே இல்லாத நித்திய வாழ்வைக் கொடுக்கவும் வந்தார். இது தான் இயேசு யார் என்பதற்கும் அவர் ஏன் வந்தார் என்பதற்குமான பதில்கள் ஆகும்.

## வெளிப்படுத்தல்

இது ஆழம் காண முடியாத, புரிந்து கொள்ள முடியாத ஒரு உண்மை என்று வேதாகமமே நமக்குச் சொல்கிறது. கடவுள் மனித உருவத்தில் நம்மைக் காக்க இறங்கி வந்தார் என்ற இந்த உண்மையை நாம் எளிதாகப் பிடித்துக் கொள்ள முடியாது. நம்மால் இதைப் பெற்றுக் கொள்ள முடியாது. இது நமக்கு மிகவும் பெரியது ஆகும். ஆம். இந்த அற்புதமான உண்மையானது நம் மனதுக்குள் அடங்காத ஒன்று என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது.

கடவுளின் உண்மையாகிய - இயேசு கிறிஸ்து, ஆவியாகவும் உண்மையாகவும் இருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நம் மனதால் புரிந்து கொள்ளப்படுவதன் மூலம் அவர் நம்மிடம் வருவதில்லை. ஆனால் நம் ஆவிக்குள், இதயத்துக்குள் வெளிப்படுத்தப்படுவதன் மூலமே அவர் நம்மிடம் வருகிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நீங்கள் என்னைப் போலவோ பெரும்பாலான மற்றவர்கள் போலவோ, கடவுளைப் பிடித்துக் கொள்ள நினைப்பவர் என்றால், அவரை உங்கள் மனதுக்குள் அடைத்துவிட வேண்டும் என்று நினைத்தால், அது மிகவும் கடினமானது ஆகும். வாகனத்தை ஓட்டுவது போன்ற அந்த இருக்கையில் இருப்பது மிகவும் கடினமானது தான். ஆனால் என் நண்பரே, உங்கள் வாழ்வில் உங்களுக்கு அதிக மதிப்புள்ளதாக இருக்கும் அனைத்துமே - நண்பர்கள், குடும்பம், மகிழ்ச்சி, சமாதானம், மன்னிப்பு, இரக்கம் போன்ற அனைத்துமே, மனதில் இருக்கும் ஒரு உண்மை அல்ல. அவை நம் இதயத்திலும் ஆவியிலும் இருப்பவை ஆகும். உண்மையிலேயே பல சூழல்களில் நாம் நமது மனம், அல்லது நமது புரிதல் ஒரு இதய உண்மையை அல்லது உறவைக் காயப்பட வைத்திருப்போம். எப்போதாவது உங்கள் தலை அறிவானது உங்கள் இதயத்தை வெற்றி கொண்டு, அதன் காரணமாக மனவருத்தம் அடைந்திருக்கிறீர்களா? எனது சிறிய மனதுக்குள் கடவுள் அடங்குவார் என்றால் அல்லது என் புரிந்து கொள்ள முடியாத புரிதலுக்குள் அடங்குவார் என்றால் அவர் உண்மையிலேயே மிகவும் சிறிய கடவுளாகத் தான் இருந்து கொண்டிருப்பார்.

வேதாகமத்தில் நமக்கு, “கடவுள் ஆவியாக இருக்கிறார். அவரை வணங்குபவர்களும் அவரை ஆவியுடனும் உண்மையுடனும் வணங்க வேண்டும்” என்று சொல்கிறது. இயேசுவே இந்த சொற்களைச் சொல்லியிருக்கிறார். அத்துடன், “என் சொற்கள் ஆவியாகவும் உயிராகவும் இருக்கின்றன” என்றும் சொல்லியிருக்கிறார்.

*இயேசுவைப் பற்றிய உண்மையானது உங்கள் மனதுக்கு சவால் கொடுப்பதாக உணர்கிறீர்களா? அது உங்கள் இதயத்தின் கதவைத் தட்டுவதாக உணர்கிறீர்களா?*

# கிறிஸ்துவின் செய்தி

மக்கள் தங்களது நம்பிக்கைகளைப் பற்றி இயேசு அவர்களுக்கு எப்படி சவால் கொடுக்கிறார் என்பது அதிக சுவராசியமானது ஆகும். அவர் பணத்தையோ செல்வங்களையோ கொடுப்பதாக வாக்குக் கொடுக்கவில்லை. இறையியல் கேள்விகளுக்குப் பதில் கொடுக்கவும் அவர் வரவில்லை. ‘‘உங்களில் யாராவது தாகமாக இருந்தால் என்னிடம் வாருங்கள். என்னை நம்புகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களிடம் இருந்து உயிருள்ள ஆறுகள் புறப்பட்டு ஓடும்’’ என்பது போன்ற செய்திகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார். நாம் தாகமாக இருந்தால் அவர் உயிருள்ள நீரைத் தருவதாக வாக்குக் கொடுக்கிறார். இது நமது தினசரி பொருளாதார வாழ்க்கையுடன் பொருந்துவது அல்ல. இது நம் மனதுக்குள்ளும் பொருந்தக் கூடியது அல்ல. ஆனால் அது நம் ஆன்மாக்களின் ஆழத்தில் விழுந்து நம் தேவையை நிவிர்த்தி செய்வதுடன் அதற்கும் மேலாக உண்மையிலேயே எதையோ செய்வதாக இருக்கின்றது.

## ‘‘தாகமாயிருக்கிறீர்களா?’’ என்ற இயேசுவின் கேள்வி உங்கள் ஆன்மாவின் துடிப்புடன் ஒத்துப் போகின்றதா?

அல்லது, உதாரண்மாக, இயேசு கூட்டத்தாரை நோக்கித் திரும்பி, ‘‘உங்களில் யாராவது களைப்படைந்து இருக்கிறீர்களா?’’ என்று கேட்டார். பின்னர், இன்னொரு வகையான ஓய்வை அவர் அவர்களுக்கு வாக்குக் கொடுத்தார்.

இயேசு அற்புதங்களைச் செய்தார். ஆனால் அவரது அற்புதங்களுக்கு குறிப்பிட்ட நோக்கத்தை வைத்திருந்தார். ஒரு தடவை இயேசு அந்த

பெரிய கூட்டத்தைப் பார்த்து, அவருக்கு பாவங்களை மன்னிக்க அதிகாரம் இருக்கிறது என்பதைப் புரிய வைக்கவே அற்புதங்களைச் செய்கிறேன் என்று சொன்னார். சில மக்களுக்கு வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்ற காரணத்துக்காக மட்டும், குறுகிய காலத்துக்காக அவர் அற்புதங்கள் செய்யவில்லை. பாவங்களை மன்னிக்கும் அவரது அதிகாரத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் நமது பெயர்களை மோட்சத்தில் எழுத வேண்டும் என்பதற்காகவும் தான் அற்புதங்களைச் செய்தார்.

ஆகவே, அவரது செய்தி என்ன? இந்த வாழ்வை, ஓய்வை, இந்த உயிருள்ள நீரை என் ஆன்மாவுக்குள் நான் எப்படிப் பெற்றுக் கொள்ள முடியும்?

இங்கே தான் இயேசுவின் செய்தி தனிப்பட்ட முறையில் அப்படியே உயிருடன் வருகின்றது

இயேசு சொன்னார், ‘‘நானே வாசலாக இருக்கிறேன், என் மூலமாக உள்ளே வருகிறவர்கள் மீட்கப்படுவார்கள்.’’ இயேசு கடவுளைப் பற்றி கற்றுக் கொடுக்கவில்லை: கடவுளை அறிந்து கொள்ள தன்னிடம் வரும்படி அவர் சொன்னார். உங்கள் வாழ்வில் நீங்கள் இப்போது பெற்றுக் கொண்டிருப்பது ஒரு நபர், எதோ ஒரு பொருளோ அல்லது கருத்தோ அல்ல. இதைப் பற்றி ஒரு நிமிட நேரம் சிந்தித்துப் பாருங்கள். எல்லாம் முடிந்த பின் இறுதியில் உங்களுக்கு மிகவும் விலைமதிப்பற்றதாக இருக்கப் போவது என்ன? அது ஒரு நபராகத் தான் இருக்கும் என்று நான் உறுதியாகச் சொல்கிறேன். கடவுள் தான் அந்த நபர். உங்களுக்கு வரக் கூடிய கடவுளைப் பற்றிய ஆழமான செய்தியானது, கடவுளே தான். ஒரு மனிதனாக அவர் வந்ததன் நோக்கமே நீங்களும் நானும் உண்மையிலேயே அவரைக் கண்டு, தொட்டுப் பார்த்து, அறிந்து கொள்வது தான். உண்மையிலேயே இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட இம்மானுவேல் என்ற ஒரு பெயரானது ‘‘கடவுள் நம்முடன் இருக்கிறார்’’ என்று பொருள் தரக்கூடியது. மனித உருவில் வந்த கடவுளாகிய இயேசு, நம்முடன் இப்போதும் எப்போதும் இருப்பதற்காகவே வந்தார்.

*கடவுளைத் தனிப்பட்ட முறையில்*
*அறிந்து கொள்ள விரும்புகிறீர்களா?*

# நம்பிக்கை

தன்னை நாம் நம்ப வேண்டும் என்று இயேசு நமக்கு சவால் கொடுக்கிறார். அவர் மக்களுடன் இருந்த போது இந்த அழைப்பைத் தான் அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களால் அவரைக் காண முடிந்தது. அவர்களால் அவரைப் பார்க்க முடிந்தது என்றால், அவரை நம்புவதைப் பற்றி ஏன் வலியுறுத்த வேண்டும்? விசுவாசம் அல்லது நம்பிக்கை என்பதைப் பற்றி எனக்கு இரண்டு கருத்துக்கள் மனதில் தோன்றின:

## 1. ஒரு உண்மையான நண்பன் உங்களை நம்புவார்!

உங்களுக்காக இல்லாத ஒரு நண்பர் என்னப்பட்ட ஒரு நபர் உங்களுக்கு இருந்திருக்கிறாரா? இந்த நபர் உங்களைப் பார்த்து உங்களை அறிந்திருப்பார். நீங்கள் அருகே இருக்கும் போது உங்களைக் கண்டு கொண்டிருப்பார்: இந்த நபர் உங்களுடன் ஒரு உறவு வைத்திருக்கிறார். ஆனால் அவர் உங்களை நம்பவில்லை. அவர்கள் தங்கள் இதயத்தின் ஒரு பகுதியை உங்களுக்குப் பூட்டியே வைத்திருக்கிறார்கள். உறவுகளில் இப்படிப்பட்ட உணர்வை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்களா?

மனித உடலில் வந்த கடவுளாகிய இயேசு, நம்முடன் இருப்பதற்காக வந்தார். இம்மானுவேல் என்னும் அவரது பெயரே கடவுள் நம்முடன் இருக்கிறார்[1]1 என்ற பொருள் உடையது. இயேசு நாம் அவரைக் கண்டு கொள்ள வேண்டும் என்று விரும்பவில்லை. அவர் நம்முடன் அன்புடன் நம்பிக்கை உள்ள ஒரு உறவைக்

1 ஏசாயா 7:14 / மத்தேயு 1:23

கொள்ளவே வந்தார். ஒருவரை ஒருவர் நம்புவது என்பது உண்மையான நட்பின் இரத்த ஓட்டமாகும்.

இயேசு "நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்" என்கிறார். தன் நண்பனுக்காகத் தியாகமாகத் தன் உயிரைக் கொடுப்பதை விட மேலான ஒரு அன்பு இல்லை என்கிறார்.[2]

## 2. பார்ப்பது என்பது நம்புவது ஆகாது!

இயேசு இந்த உலகத்தில் இருந்த போது, பலர் அவரது வல்லமையைக் கண்டனர். ஆனால் அவரை நம்பவில்லை. நீங்களும் கூட என்னைப் போலவே, சில நேரங்களில் இப்படியாக நினைத்திருக்கலாம் அல்லது சொல்லியிருக்கலாம், "நான் மட்டும் உண்மையிலேயே இயேசுவைப் பார்க்க முடிந்தால் எப்படி இருக்கும்?" உண்மை என்னவென்றால், அனேகர், அவரை மனித உருவத்தில் பார்த்தவர்கள் அவரை நம்பவில்லை. பல நேரங்களில் உண்மையாகவே அவர் அற்புதங்கள் செய்த போது மக்கள் அவருக்கு எதிராகத் திரும்பினார்கள். இறுதியில் அவரைக் கண்டவர்கள், கேட்டவர்கள், உடன் நடந்தவர்கள், அவரது அற்புத அடையாளங்களை அனுபவித்தவர்கள் அனைவருமே, அவருக்கு எதிராக சதித்திட்டம் தீட்டினார்கள் அல்லது அவரை விட்டு ஓடிவிட்டார்கள். அவரைக் கண்ட மக்களின் நடுவிலேயே ஒரு அதிகாலை நேரத்தில் மரணமடைந்தார்.

ஆகவே இயேசு, அவரை விசுவாசிக்கும்படி, நம்பும்படி அழைக்கிறார். பார்ப்பதற்கு அல்ல. மனிதர்கள் அவரைக் கண்ட போது அவரைக் கொன்றார்கள். நம் கண்களால் காண்பவற்றை மட்டுமே பின்பற்ற, அதற்கு உண்மையாக இருக்க முடியும். அவரது சீடர்களைப் போல நாம் சில காலத்துக்கு உண்மையாக இருப்போம். ஆனால் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், நம் கண்களும், மனமும், இதயமும் நம்மைக் கைவிட்டுவிட நம்மால் தொடர்ந்து செல்ல முடியாது. நாம் ஒரு காலத்தில் கண்டு, நம்பி, நேசித்த ஒன்றுக்கு எதிராகவே மாறிவிடவும் வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இயேசு தனது சீடனாகிய தோமாவிடம் இவ்வாறு சொன்னார், "கண்டு விசுவாசிப்பவர்களை விட காணாமல் விசுவாசிப்பவர்கள் பாக்கியவான்கள்."

---

2. யோவான் 15:13-15

இங்கே உலகத்தில், நமது இதயத்தின் கண்களால் கண்டு அவரை நம்ப வேண்டும் என்று விரும்புகிறார். அதாவது ஏற்றுக் கொண்டு, பின்பற்றி, கீழ்ப்படிந்து, வணங்க வேண்டும். இயேசு உங்களுடன் ஒரு உண்மையான உறவைக் கொள்ள விரும்புகிறார். அது ஒரு நட்பு ஆகும். ஒரு நாளில் நாம் மகிமைக்குள்ளாகக் கடந்து செல்வோம், அங்கே நம் கண்கள் பரிசுத்தமாக்கப்பட்டு, நம் இதயங்கள் உறுதியடையும். அப்போது நாம் அவரை முகமுகமாய்க் காண்போம். ஆனால் இப்போதைக்கு விசுவாசிப்பது தான் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அழைப்பு ஆகும்.

*உங்கள் இதயத்தின் கண்களால்*
*இயேசுவைக் காண்பதாக*
*உணருகிறீர்களா?*

# பொக்கிஷம்

இயேசுவைக் கண்டு அவரை நம்புவது ஏன் கடினமானதாக இருக்கிறது? ஏன் இந்த முழு உலகமும் இயேசுவைக் கண்டு அவரை நம்பாமல் இருக்கின்றது?

நான் வேதாகமத்தை வாசித்த போது, கடவுள் எவ்வாறாக செயலாற்றுகிறார் என்று கண்டு அதிசயப்பட்டேன். காலங்கள் துவங்கும் போதிலிருந்தே, கடவுள் அனைவரையுமே சமமாக நேசிக்கிறார் என்றாலும், சிலர் கடவுளை அறிந்திருந்தார்கள். சிலர் அவரை அறிந்திருக்கவில்லை. இதை நம்மால் புரிந்து கொள்ள முடியாது. விளக்கவும் முடியாது.

இயேசு இந்த உலகத்தில் போதனை செய்து கொண்டும், அற்புதங்கள் செய்து கொண்டும் நடமாடிக் கொண்டிருந்த போது இது தான் நடந்தது. சிலர் அவரது பாதங்களில் விழுந்து, ‘‘நீரே ஆண்டவர்’’ என்றார்கள். மற்றவர்கள் அவரை ஏளனமாகப் பார்த்தார்கள். கிண்டல் செய்தார்கள், அவரது அதிகாரத்தைக் கேள்வி கேட்டார்கள். இது எப்படி நடக்க முடியும்? ஒரு நபர் எப்படி இயேசுவைக் கண்டு கடவுளை அவரில் காண முடியும்? அதே நேரத்தில் வேறு சிலர் ஒரு சாதாரண மனிதனை மட்டுமே காண முடிந்தது? இதை என்னால் விளக்க முடியாது.

ஆனால் இயேசுவின் வாழ்க்கை மற்றும் போதனைகளின் மூலமாக நான் கண்டது என்னவென்றால், அவர் தன்னை ஒரு ஆழமானதும், அமைதியானதுமான வழியில் வெளிப்படுத்தினார். மிகவும் அமைதியாக, மிகவும் ஆழமாக. உண்மையிலேயே இயேசு யார் என்று ஒரு நபர் கண்டால், கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற இயேசுவைக் கண்டால், அந்த வெளிப்படுத்தலானது அந்த நபரின் ஆள்த்தன்மையின் மையத்துக்கே சென்றுவிடும். அவர்களை அதன் பின்னர் முற்றிலுமாக மாற்றிவிடும். அந்த

வெளிப்படுத்தல் மிகவும் ஆழமானதாக, பரிசுத்தமானதாக, அமைதியானதாக இருப்பதால், நாம் கவனிக்காமலேயே அது நம்மைத் தாண்டிச் சென்று விடக்கூடும்.

இயேசு இந்த உண்மையை நமக்கு விளக்குவதற்காக ஒரு கதையைச் சொன்னார். “பரலோகராஜ்யம் நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்.”[3]3 என்று அவர் சொன்னார்.

*இயேசுவை ஒரு பொக்கிஷமாக நீங்கள் காணத் துவங்கியிருக்கிறீர்களா? ஆனால் உங்களை சுற்றி இருக்கும் பலரால் அவரைக் காண முடியாமல் இருக்கின்றதா?*

3 மத்தேயு 13:44

# இரத்தம்

இயேசுவின் வாழ்க்கை வரலாறு ஒரு அற்புதமானது. ஒரு கடவுளாக அவர் நம்மை நம் பாவங்களில், கறைகளில் இருந்து விடுதலை செய்யவே அவர் வந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நமது பாவங்களில் ஆழமானவை பொதுவாக ஒரு இரத்தத் தடத்தை விட்டிருக்கும். மனிதர்களின் வாழ்வின் ஆதாரமாகிய இரத்தம் சிந்தப்பட்டால் அங்கே ஒரு வன்முறை நடந்திருக்கும். அங்கே ஒரு கொடுமையும், துரதிருஷ்டமும், மரணமும் நடந்திருக்கும். நம் அனைவரின் கைகளிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்த இரத்தமானது ஒட்டி இருக்கின்றது. அடிமைத்தனத்திலும், கொடுமைகளிலும் தான் இந்த உலகமானது கட்டி எழுப்பப்பட்டிருக்கின்றது. நாம் இரத்தத்தை சிந்தியிருக்கலாம், அல்லது மக்களின் இரத்தத்தை ஏமாற்றிப் பெறப்பட்ட பொருட்களை வாங்கியிருக்கலாம். இது நமக்கு சங்கடத்தை உண்டாக்கக் கூடிய ஒரு உண்மை தான். ஆனால் இந்த உலகத்தின் இருளுக்கு மையமாக இரத்தம் சிந்துதல் இருக்கின்றது. கடவுளிடம் இருந்து நாம் பிரிக்கப்பட்டிருப்பது தான் இந்த இருள் ஆகும்.

ஆகவே இயேசு, நம்மை நமது பாவத்தில் இருந்து இருளில் இருந்தும் மீட்க வந்தார். நமக்கு எதிராக செய்யப்பட்ட தவறுகளில் இருந்தும் நாம் செய்த தவறுகளிலும் இருந்து நம்மைக் காப்பாற்ற வந்தார். நமது ஆன்மாவை சுகப்படுத்தி, மறுபடியும் சரியாக்க அவர் வந்தார். ஒவ்வொரு ஆன்மாவும் ஒவ்வொரு இதயமும் நாம் வாழும் இந்த நிலமும் கூட மீட்கப்படவே அவர் வந்தார். இந்த மீட்புக்கும், மன்னிப்புக்குமான வாசலை இயேசு திறந்தார். அது ஒரு மாபெரும் ஆன்மீக வழியாகும். இயேசு, நம் பாவங்களைத் தன் மீது, தன் உடலில் ஏற்றுக் கொண்டு அதை சுமந்து கொண்டு இறந்தார். ஒரு

வேத வசனம் இவ்வாறாகச் சொல்கிறது: “பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.”[4]4

இயேசு எனது குற்றத்தையும் அவமானத்தையும் தன் மீது ஏற்றுக் கொண்டார். பின்னர் அதை சுமந்து கொண்டு இறந்தார். என் பாவங்களுடன் இறந்து, பின்னர் உயிருடன் எழுந்தார் இயேசு. ஆனால் என் பாவம் அவருடன் மீண்டும் வரவில்லை. அவர் பாவத்தை கல்லறையிலேயே விட்டுவிட்டார். இயேசு என் பாவத்தை ஏற்றுக் கொண்டு அத்துடன் இறந்து எனக்கு மன்னிப்பையும் புது வாழ்வையுமே கொண்டு வந்தார்.

வேதாகமத்தில் உள்ள ஒரு வல்லமையுள்ள வாக்கியம் இவ்வாறு இதைப் பற்றிச் சொல்கிறது: “நம் பாவத்தின் இரத்தத்தை விட இயேசுவின் இரத்தமானது சிறந்த வார்த்தையைப் பேசுகிறது.”

இதன் காரணமாக, நாம் இயேசுவை நம்பும் போது அவரது பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்ளும் போது, அவரது தியாக பலியான இரத்தத்துக்காக நாம் நன்றி உள்ளவர்களாக இருக்கிறோம். இயேசுவின் இரத்தத்துக்காக.

*அவரது இரத்தத்தால் கழுவப்பட*
*நீங்கள் விரும்புகிறீர்களா?*

4 2 கொரிந்தியர் 5:21

# ஆவி

இயேசு உயிருடன் இருக்கிறார். அவர் உடலுடன், மோட்சத்தில் இருக்கிறார். ஒரு நாளில் அவரை நீங்கள் முகமுகமாகப் பார்க்க முடியும்.

ஆனால் இயேசு தன் சீடர்களிடம் அவர் விரைவில் உலகத்தை விட்டு மோட்சத்துக்குச் செல்வதாகச் சொன்ன போது அவர் அவர்களிடம் அதற்காக மகிழ்ச்சியடைய வேண்டும் என்றார். சோகமாக இருக்கக் கூடாது என்றார். ஏனென்றால் அதற்கு பொருள் பரிசுத்த ஆவியானவர் அவர்களிடம் வருவார். அவர் அவர்களுக்குள் இருப்பார். [5]5

இயேசு இந்த உலகத்தில் இருந்த போது, அவர் ஒரு மனித உருவத்தில் தான் இருந்தார். இயேசு ஒரு கிராமத்தில் இருந்தார் என்றால் அவர் வேறு ஊரில் இருந்திருக்க முடியாது. இயேசு தன் கைகளை ஒரு மனிதனின் மேல் வைத்தார் என்றால் அவர் இன்னொரு நபரின் மேல் தன் கைகளை வைத்திருக்க முடியாது. அவர் ஒரு மனித உருவத்தில் இருந்தார். ஆகவே இடத்திலும் நேரத்திலும் நம்மைப் போல கட்டுப்படுத்தப்பட்டவராகவே இருந்தார்.

இயேசு மோட்சத்துக்கு ஏறிப் போனபோது, இயேசுவின் ஆவியான, பரிசுத்த ஆவியானவர் இப்போது உலகம் முழுவதின் மேலும் ஊற்றப்பட்டார். அதாவது இயேசுவின் ஆள்த்தன்மையும் அவரது சமாதானமும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நபரது இதயத்திலும் வீடுகளிலும் ஒரே நேரத்தில் இருக்க முடியும். அதைப் போலவே இயேசு நம் அருகில் நடந்து போவது மட்டுமல்லாமல், ஒவ்வொருவரது இதயத்திற்குள்ளும் வாழ முடியும்.

---

5 யோவான் 14:17,26,28

இயேசு, மரணமடைந்து, மீண்டும் உயிருடன் எழுந்து இந்த உலகத்தில் தனது பணியை முடித்துவிட்டதால், நமக்கு மன்னிப்பையும் முடிவில்லாத வாழ்வையும் கொடுத்ததால் - அவர் உடலுடன் மோட்சத்தில் வசிக்கிறார். நாம் இப்போது அவருடன் பரிசுத்த ஆவியானவர் மூலமாகத் தொடர்பு கொள்ள முடியும்.

நாம் இயேசுவை நம்பும் போது, அவர் நமக்குள் பரிசுத்த ஆவியானவர் மூலமாக வருகின்றர். நம் இதயத்துக்குள், ஆன்மாவுக்குள், ஆவிக்குள் வசிக்கிறார். கடவுள் நம்முடன் இருக்கிறார்.

?

*நீங்கள் இயேசுவை நம்புகிறீர்களா?
பரிசுத்த ஆவியானவர் உங்கள்
இதயத்திலும் வாழ்க்கையிலும்
இருக்க வேண்டும் என்று
விரும்புகிறீர்களா?*

# அழைப்பு

இயேசு கூறினார், "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்." (யோவான் 10:9)

இயேசுவை இப்போதே உங்கள் வாழ்விலும் இதயத்திலும் வரவேற்க விரும்புகிறீர்களா?

இது ஒரு ஆன்மீகத் தீர்மானம் ஆகும். இயேசுவுக்கு உங்கள் வாழ்வைக் கொடுப்பதன் மூலமாக, நீங்கள் பாவ மன்னிப்பையும் முடிவில்லாத வாழ்வையும் பெற்றுக் கொள்கிறீர்கள். இயேசுவை அறிந்து கொண்ட அந்த நேரத்திலேயே நீங்கள் ஒரு புதிய பாதையில் செல்கிறீர்கள். இந்த பாதையானது எப்போதும் பிரகாசமாக இருக்கும் ஒரு பகல் நேரத்து வெளிச்சம் ஆகும். (நீதிமொழிகள் 4:18)

மரணத்தில் இருந்து வாழ்வுக்கு நீங்கள் எப்படிக் கடந்து செல்ல முடியும் என்றும் இயேசுவை அறிந்து கொள்வது எப்படி என்றும் இங்கே சொல்லப்படுகிறது. நீங்கள் செய்ய வேண்டிய இரண்டு முக்கியமானவைகள் இருக்கின்றன. கீழே அவற்றை நான் கொடுக்கிறேன். நீங்கள் உங்கள் இதயத்தில் இருந்து சொல்வதற்கான ஒரு பிரார்த்தனையையும் அதன் கீழே உங்களுக்குக் கொடுத்திருக்கிறேன்:

## 1. பாவத்திலிருந்து மனம் திரும்புதல்:

நீங்கள் உங்கள் பாவத்தில் இருந்து மனம் திரும்ப வேண்டும். ஆம், இது கடினமான ஒன்று தான். ஆனால் இதைச் செய்யும்படி இயேசு அழைக்கிறார்.

கடவுளின் உதவியுடன் உங்கள் வாழ்வில் பாவத்தில் இருந்து திரும்ப வேண்டும் என்ற முடிவை எடுக்க வேண்டும். பண ஆசை, இச்சை, பேராசை, நேர்மையற்ற நிலை, அடிமைத்தனம், விபச்சாரம், ஆபாசப்படங்கள் போன்ற பாவங்களில் இருந்து திரும்ப வேண்டும்.

பாவத்திலிருந்து மனம் திரும்புதல் என்பது இதயத்திலிருந்து எடுக்கப்படும் தீர்மானம் ஆகும். இது உங்கள் வாழ்விலும் வீட்டிலும் மற்றவர்களால் வெளிப்படையாகக் காணப்பட வேண்டியது ஆகும். நீங்கள் விட்டுவிட வேண்டிய சில இருக்கலாம், தகவல் தொடர்பு செய்யப்பட வேண்டியவைகள் இருக்கலாம். தூக்கி எறிய வேண்டியவைகள் இருக்கலாம். நிறுத்தப்பட வேண்டியவைகள், கொடுக்கப்பட வேண்டியவைகள் இருக்கலாம். நீங்கள் பாவத்தில் இருந்து மனம் திரும்ப முடிவு செய்துவிட்டீர்கள் என்றால், திரும்ப வேண்டும் என்று நினைத்தீர்கள் என்றால், நீங்கள் சரியான திசையில் தான் செல்கிறீர்கள். அது தான் அடுத்த படியாகும்.

## 2. இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம்:

எந்த ஒரு உண்மையான உறவிலும், நம்பிக்கை, விசுவாசம் போன்றவற்றைப் பற்றிய உண்மையின் முக்கியத்துவம் என்ன என்பதை ஏற்கனவே கண்டோம். இயேசு தன்னை நாம் விசுவாசிக்க வேண்டும் என்று அழைக்கிறார். அந்த நம்பிக்கையின் முதல் அடியை நாம் எடுத்து வைக்க வேண்டும் என்று இயேசு அழைக்கிறார். அவர் மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை நீங்கள் வாய்விட்டுச் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறார். நான் ஒரு பிரார்த்தனையை உங்களுக்காக எழுதியிருக்கிறேன். அதை உங்களுடைய பிரார்த்தனையாக மாற்றிக் கொள்ளுங்கள். அந்த பிரார்த்தனை உங்கள் இதயத்தில் இருந்து உண்மையாக வெளிப்பட வேண்டும்.

நீங்கள் உங்கள் பாவங்களில் இருந்து மனம் திரும்பி, உங்கள் நம்பிக்கையை இயேசு கிறிஸ்துவின் மேல் வைத்தீர்கள் என்றால், அவர் இந்த நேரத்திலேயே தனது பரிசுத்த ஆவியானவரை உங்கள் இதயத்தில் வைத்து, உங்கள் பாவங்களை மன்னித்து, உங்கள் பெயரை மோட்சத்தில் எழுதுவார்.

## பிரார்த்தனை:

அன்பின் ஆண்டவர் இயேசுவே, என்னை நேசிப்பதற்காக உமக்கு நான் நன்றி சொல்கிறேன். என் பாவங்களுக்காக நீர் இறந்ததற்காக உமக்கு நன்றி. எனக்கு மன்னிப்பையும் முடிவில்லாத வாழ்வையும் கொடுப்பதற்காக உமக்கு நன்றி சொல்கிறேன்.

இன்று நான் என் பாவங்களுக்காக மனம் வருந்தி, மனம் திரும்புகிறேன். என் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் உம் மீது வைக்கிறேன். என் பாவத்தை மன்னித்து உம் பரிசுத்த ஆவியானவரை எனக்குள் ஊற்றும்படியாகக் கேட்கிறேன்.

என்னை மன்னித்ததற்காக உமக்கு நன்றி ஆண்டவரே. என்னை மீட்டதற்காக இயேசுவே உமக்கு நன்றி. நான் உண்மையுடன் என் வாழ்நாள் முழுவதிலும், உம்மை முகமுகமாகப் பார்க்கும் வரைக்கும் உம்மைப் பின்பற்ற எனக்கு உதவி செய்யும். இயேசுவின் பெயரால் கேட்கிறேன். ஆமென்!

# புதிய வாழ்வு

இயேசுவை நம்பும் இந்த விசுவாச அடியை நீங்கள் எடுத்து வைத்தால், நீங்கள் மீட்கப்பட்டுவிட்டீர்கள். நீங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டீர்கள். நீங்கள் ஒரு புதிய நபராகிவிட்டீர்கள். இது கடவுளின் உண்மை. இது இயேசுவின் செய்தி.

ஒரு புதிதாகப் பிறந்த விசுவாசியாக, நீங்கள் தினமும் வேதாகமத்தை வாசிப்பது முக்கியமானதாகும். இயேசுவுடன் பிரார்த்தனையில் சிறிது நேரம் செலவிடுவதும் முக்கியமானது ஆகும். நீங்கள் ஒரு நல்ல கிறிஸ்தவ ஆலயத்தில் உறுப்பினராகச் சேர்வதும் முக்கியம். அதன் மூலம் நீங்கள் உங்கள் விசுவாசத்தில் வளர முடியும். மற்ற விசுவாசிகளின் ஆதரவு உங்களுக்கு இருக்கும்.

உங்களிடம் வேதாகமம் இல்லை என்றால் ஒன்றை நீங்கள் வாங்கிக் கொள்ளும்படி நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ‘New International Version’ (Bible NIV) அல்லது ‘English Standard Version’ (Bible ESV) என்ற வேதாகமத்தை நீங்கள் வாங்கலாம். தமிழ் மொழியிலும் வேதாகமம் கிடைக்கின்றது. நீங்கள் புத்தகக் கடைகளிலோ, இணையத் தளத்திலோ தேடி வாங்கிக் கொள்ளலாம்.

நான் ஒரு நாளுக்கு ஒரு அத்தியாயம் வேதாகமத்தில் இருந்து வாசிக்கிறேன். நீங்கள் லூக்கா என்ற புத்தகத்தில் இருந்து துவங்கலாம். பின்னர் தொடர்ந்து வாசித்துக் கொண்டே இருக்கலாம்.

நம்பத்தகுந்த நல்ல சபை ஒன்றைக் கண்டு பிடியுங்கள். சரியான முடிவு எடுக்க இயேசு உங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று பிரார்த்தனை செய்யுங்கள். உங்களுக்குத் தெரிந்த, நீங்கள் நம்புகின்ற ஒரு கிறிஸ்தவரிடம் நல்ல சபையைக் காட்டும்படி கேளுங்கள். வாரம் ஒரு முறை ஆலயம்

செல்வதற்கு முன்னுரிமை கொடுங்கள். அதை ஆண்டவருக்கான பலியாக செலுத்துங்கள். நீங்கள் இதைச் செய்வதற்கு உங்கள் தினசரி வேலைகளில், பண வரவு செலவுகளில் சிலவற்றை விட்டுவிட வேண்டியதாக இருக்கலாம். இதைச் செய்வதற்காக ஆண்டவர் உங்களை கனப்படுத்துவார்.

உங்களிடம் இருந்து பதிலை நான் எதிர்பார்க்கிறேன். எனது இணையத்தளம் மூலமாக நீங்கள் இந்த நம்பிக்கையின் அடியை எடுத்து வைத்திருப்பீர்கள் என்றால், என் இணையத்தளம் மூலமாக எனக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்புங்கள். நான் உங்களுடன் மகிழ்வேன். உங்களுக்காக பிரார்த்தனை செய்வேன்.

என் சகோதரனே, சகோதரியே, கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக. நாம் குடும்பக் கூடுகையில் நேரில் சந்திக்கும் வரை, ஆண்டவர் உங்களை ஆசீர்வதித்து பாதுகாத்து, செழிப்புடன் வைத்திருப்பாராக.

மேலும் அதிகமான தகவல்களுக்கு எனது இணையத் தளத்தை பார்வையிடுங்கள்:

www.1peter1three.weebly.com

‘கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர் ’
எண்ணாகமம் 6:24-26

# மேற்கோள் காட்டப்பட்ட வேத வசனங்கள்

தன்னிடம் வரும்படி கடவுள் நம்மைக் கேட்கிறார்: 2 கொரிந்தியர் 5:20

கிறிஸ்துவையும், அவர் வேதத்தையும் அவரது ஆவியானவரை மட்டுமே அறிதல்: 1 கொரிந்தியர் 2:2-

இறைவனது வெளிப்படுத்தலும் வேதாகமத்தைத் தவறாகப் பயன்படுத்துதலும்: எபிரெயர் 4:12/எரேமியா 29:13 (பார்க்க மத்தேயு 4:1-11 & 2 கொரிந்தியர் 4:2)

படிப்பறிவு இல்லாமல் வேதாகமத்தை எழுதியவர்கள்: அப்போஸ்தலர் 4:13

இயேசு என்பதற்கு, ‘கடவுள் காப்பாற்றுகிறார் ’ என்று பொருள்: மத்தேயு 1:21

மனித உருவத்தில் வந்த கடவுள் இயேசு: ஏசாயா 7:14/மத்தேயு 1:23; ஏசாயா 9:6; யோவான் 1:1-5,9,14; யோவான் 8:58/யாத்திராகமம் 3:14; யோவான் 10:30; யோவான் 14:9; யோவான் 9:38/மத்தேயு 14:33/யாத்திராகமம் 20:5; யோவான் 5:46; கொலோசேயர் 1:15-20; எபிரெயர் 1:3; பிலிப்பியர்2:6-11; சகரியா 14:9/அப்போஸ்தலர் 4:12; வெளிப்படுத்தல் 1:13-18

இயேசுவின் பாவத்தை மன்னித்தல் மற்றும் முடிவில்லாத வாழ்வைத் தருவதன் நோக்கம்: லூக்கா 5:24; யோவான் 11:25-26; யோவான் 4:13-14

வெளிப்படுத்தல், புரிந்து கொள்ள முடியாதது!: யோவான் 6:37, 65; மத்தேயு 16:16-18; ரோமர் 11:33-36; ஏசாயா 55:8-9; சங்கீதம் 36:9; 2 கொரிந்தியர் 4:6; யோவான் 4:24 & யோவான் 6:63

கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்தல்: யோவான் 7:37-38; யோவான் 11:25-26; யோவான் 9:35; மத்தேயு 11:28-30; லூக்கா 5:24; லூக்கா 10:20; யோவான் 10:9; யோவான் 5:39-40; யோவான் 15:13-15

பார்த்தல் என்பது நம்புதல் அல்ல: யோவான் 11:45,53; மத்தேயு 26:56; மாற்கு 15:25 (9 in the morning) யோவான் 20:29; 2 கொரிந்தியர் 4:6; 2 கொரிந்தியர் 5:7; 1 யோவான் 3:2; 1 கொரிந்தியர் 13:12

கடவுள் அனைவரையும் சமமாக நேசிக்கிறார்!: 2 பேதுரு 3:9; 1 தீமோத்தேயு 2:4; மத்தேயு 18:14; யோவான் 3:16

கிறிஸ்துவை வணங்குதலும் புறக்கணித்தலும்: யோவான் 9:38; மத்தேயு 14:33; யோவான் 10:20; 2 கொரிந்தியர் 5:16

ஆழமானதும் அமைதியானதுமான வெளிப்படுத்தல்: மத்தேயு 16:20; மாற்கு 1:24,34,44; மாற்கு 4:11; ஏசாயா 6:9; 2 கொரிந்தியர் 5:16; சங்கீதம் 42:7; மத்தேயு 13:44

இரத்தமும், கிறிஸ்துவில் விடுதலையும்: ஏசாயா 1:18; சங்கீதம் 25:15; 2 கொரிந்தியர் 5:17; Galatians 2:20; லூக்கா 4:18/ஏசாயா 61:1; ஏசாயா 42:3; 2 நாளாகமம் 7:14; 2 கொரிந்தியர் 5:21; எபிரெயர் 9:22; எபிரெயர் 12:24

ஆவி: யோவான் 14:1-4; வெளிப்படுத்தல் 1:13-18; 1 கொரிந்தியர் 13:12; யோவான் 14:17,26,28

அழைப்பும் புதிய வாழ்வும் : எபேசியர் 1:13-14; கொலோசேயர் 1:27; நீதிமொழிகள் 4:18; யோவான் 5:24; மாற்கு 1:15; மத்தேயு 3:8; அப்போஸ்தலர் 3:19; ரோமர் 10:9; லூக்கா 10:20; 2 கொரிந்தியர் 5:17; எபிரெயர் 10:25; சங்கீதம் 1; யோசுவா 1:9; எபிரெயர் 4:12/2 தீமோத்தேயு 3:16

இந்த மொழியாக்கமானது ஞாயிறு பள்ளி மையத்தின் தாராளமான நன்கொடையினால் ஆதரவளிக்கப்பட்டது:
www.sunday-school-center.com